

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.11.2025) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, தித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உட்பட மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் இடைக்கழி நாடு பேரூராட்சி பகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பேரூராட்சி தலைவர் சம்யுக்தா அய்யனார் ஏற்பாட்டில் நடைபெற்றது அதில் தூய்மை பணியாளர்கள் பொதுமக்கள் பள்ளி மாணவ மாணவிகள் ஆதரவற்றோர் முதியோர் உள்ளிட்ட 3000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம் எல் ஏ வழங்கினார். அருகில் பேரூர் செயலாளர் மோகன்தாஸ், மாவட்ட அவைத்தலைவர் இனியரசு, பேரூர் அவைத் தலைவர் அருணா,பேரூர் துணை செயலாளர் ரஞ்சித் குமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சரண்ராஜ் உள்ளிட்ட பேரூர் நிர்வாகிகள் மன்ற உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு – சென்னை மாநகராட்சி

# மழையை எதிர் கொள்ள தயாராக உள்ளது!

## நெல்லையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!



நெல்லை, நவ.29-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் குலவணிகர் கிராமம் பொருநை அருங்காட்சியக பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா,துணை மேயர் கே. ஆர்.ராஜ் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு பணி மேற்கொண்டார்.

பின்னர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்ததாவது.

தமிழகத்தின் தொன்மையான வரலாற்றினை உலகரிய செய்யும் பொருட்டு கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் கிடைத்த தொல் பொருட்களை காட்சிப்படுத்திட திருநெல்வேலி மாவட்டம் குலவணி கர்புரம் கிராமத்தில் அருங்காட்சியகம் அமைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

பொதுப்பணித்துறை சார்பில் ரூ.56.60 கோடி மதிப்பீட்டில் 13 ஏக்கர் நிலத்தில் 54 ஆயிரம் சதுர அடியில் ஆதிச்சநல்லூர் தொகுதி A மற்றும் B கட்டடம் 16,486 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல் தளமும், சிவகளை கட்டடம் 8,991 சதுர அடியில் தரைதளம், முதல் தளமும்,கொற்கை தொகுதி A மற்றும் B கட்டடம் 17,429 சதுர அடி தரைதளம்,முதல் தளத்துடன் கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன.

மேலும் ஒவ்வொரு கட்டடத்திற்கு இணைப்பு சாலை அமைக்கவும், அழகு நிறைந்த குளமும்,குளத்தின் மீது பாலம் அமைக்கவும், சுற்றுச்சுவர்,பூங்காக்கள், வண்ண விளக்குகள், நீறுற்று, சுற்றுச்சூழல் திறந்த வெளி திரையரங்கு அமைப்புகள்,திறந்தவெளி கூட்டரங்கம் போன்ற பல்வேறு பணிகள் மக்களை கவரும் வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.வயதானவர்கள் சென்று பார்க்கும் வகையில் பேட்டரியால் இயங்கும் வாகன வசதி செய்துதரப்படவுள்ளது. தொல்லியல் துறையின் மூலம் ரூ.6 கோடி மதிப்பில் காட்சிப்படுத்தும் கூடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு,காட்சிப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பொருநை அருங்காட்சியகம் பொதுமக்களின் பார்வைக்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வரும் 20122025 அன்று திறந்து வைக்கவுள்ளார்கள்.

மேலும் முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரி கூடுதல் கட்டிடத்தையும், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பருவமழை சந்திப்பதற்கு முன்னேற்பாடு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.திடியூர் தமிழாக்குறிச்சி அணையில் ஏற்பட்டுள்ள கசிவு பொறியாளர்கள் மூலம் ஆய்வு செய்து நிரந்தரமாக அடைப்பதற்கும்,மேலும் இதுபோன்ற கசிவுகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை விரிவுப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.இதனால் சாலைகள் பழுதடைந்துள்ளது. இப்பணிகள் முடிவடைந்தவுடன் மேடு,பள்ளம் இல்லாமல் சரிசெய்யப்பட்டு சாலைகள் அமைக்கப்படும்.

தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்ததாவது.

மாவட்டத்தில் நடந்து வரும் 831 கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் பணிகள் முடிவடைய இன்னும் 15 முதல் 20 நாட்களாகும் என்பதால், பணிகள் முழுமையாக முடித்துவிட்டால் அந்தப் பணிகளை தொடங்கி வைக்க வாய்ப்பு உள்ளது.

தாமிரபரணியில் கழிவு நீர் கலப்பதை தடுப்பது குறித்து சென்னை மற்றும் பிற மாநகராட்சிகளை போலவே நெல்லையிலும் கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சி செய்யும் திட்டங்கள் செயல்படுத்தப்படும். தற்போதுள்ள 50 எம்.எல்.டி சுத்திகரிப்பு நிலையத்தை மேலும் விரிவு படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.எந்த ஒரு நீர் நிலையிலும் கழிவுநீர் கலக்காதவாறு தடுக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

கோவையில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பெயரில், திருச்சியில் காமராஜர் பெயரில் நூலகம் வருகிறது. நெல்லையில் காயிதேமில்லத் பெயரில் நூலகம் அமைகிறது.இந்த பணிகள் துரிதப்படுத்தப்பட்டு விரைவில் முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படும்.

சென்னை மாநகராட்சி மழையை எதிர்கொள்ள முழுமையாக தயாராக உள்ளது.மழை நீரை வெளியேற்ற 100 முதல் 150 டிராக்டர் மோட்டார்கள் மற்றும் உயர்திறன் கொண்ட மோட்டார்கள் தயார் நிலையில் உள்ளன.சுரங்கப் பாதைகளில் தேங்கும் நீரை உடனுக்குடன் அகற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மழைநீர் வடிகால் பணிகள் பெரும்பாலான இடங்களில் முடிந்துவிட்டன. பல ஆண்டுகளாக தூர்வாரப்படாத விருகம்பாக்கம் கால்வாய்,ரெட்டேரி உள்ளிட்ட முக்கிய கால்வாய்கள் தூர்வாரப் பட்டுள்ளன.15 முதல் 20 சென்டிமீட்டர் மழை பெய்தாலும் நீர் 4 முதல் 5 மணி நேரத்தில் வடிந்துவிடும் வகையில் கட்டமைப்பு உள்ளது.வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை கருத்தில் கொண்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை களும் எடுக்கப்பட்டுள்ளன.

நெல்லையில் உள்ள வெள்ளநீர் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது இதனை அடைப்பதற்கு வல்லுனர் குழு வந்துள்ளனர் அதனை உடனடியாக சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார். நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் தர்மன்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, தச்சை பகுதி பொறுப்பாளர் சுப்பிரமணியன், மானூர் ஒன்றிய செயலாளர் அருள் மணி,மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை,ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், கண்காணிப்பு பொறியாளர் ஸ்ரீதரன், செயற்பொறியாளர் ஜோசப் ரன்சட் பெரஸ்,ஸ்ரீராம்,தொல்லியல்துறை இணை இயக்குநர் யதீஷ்குமார் (தொழில்நுட்பம்) மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## நாகை மாவட்ட கழக இளைஞரணி

# துணை அமைப்பாளர் கே.பன்னீர்செல்வம் மறைவு!

## இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ. 29-

நாகை மாவட்டம், கீழையூர் ஒன்றியம், ஆலமழை நடுத்தெருவைச் சேர்ந்தவரும் நாகை மாவட்ட கழக இளைஞர் அணித் துணை அமைப்பாளருமான கே.பன்னீர்செல்வம் அவர்கள் மறைவுக்கு கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் ஆலமழை நடுத்தெருவைச் சேர்ந்தவரும் நாகை மாவட்ட கழக இளைஞர் அணித் துணை அமைப்பாளருமான சகோதரர் கே.பன்னீர்செல்வம் அவர்கள் எதிர்பாராத விதமாக மறைவெய்தியது மிகுந்த அதிர்ச்சியும் வேதனையையும் தருகிறது.

இளம் வயது முதலே கழகத்தின் மீது மாறா பற்றுக் கொண்டு தீவிரமாக இயக்கப் பணியாற்றி வந்தவர் அன்புச் சகோதரர் கே.பன்னீர்செல்வம். தாய், தந்தையர் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக இருந்து செயல்பட்டு வந்த குடும்பப் பின்னணியில் வளர்ந்த இவர், அதே உணர்வுடன் இயக்க பணியாற்றி வந்தார்.

அவரது உழைப்புக்கு அங்கீகாரமாக ஒருங்கிணைந்த கீழையூர் ஒன்றிய அமைப்பாளர், கீழையூர் கிழக்கு ஒன்றிய அமைப்பாளர், நாகப்பட்டினம் மாவட்ட துணை அமைப்பாளர் எனப் படிப்படியாக பொறுப்பு உயர்வுகளை வழங்கியது நம் இளைஞர் அணி. இளம் வயதில் அவரது திடீர் மறைவு கழகத்திற்கும் இளைஞர் அணிக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரின் இணையர் சகோதரி பி.சரண்யா அவர்களும் கழகத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினராகவும், தற்போது மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராகவும் செயல்பட்டு வரும் அவருக்கு, இது எடு செய்ய முடியாத இழப்பு.

சகோதரர் கே.பன்னீர்செல்வம் அவர்களின் மறைவுக்கு கழக இளைஞர் அணி சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அவரை இழந்து வாடும் இணையர் திருமதி பி. சரண்யா, மகன்கள் கே.பி.அகிலன், கே.பி. அமுதன், மகள் கே.பி.ஆத்விகா, அவரது குடும்பத்தினர் மற்றும் நாகை மாவட்ட கழக உடன்பிறப்புகளுக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



துணை முதல்வர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா முன்னிட்டு படப்பை ஊராட்சியில் காஞ்சி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றிய குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், படப்பை ஊராட்சி மன்ற தலைவர் எஸ் கர்ணன் ஆகியோர் கலந்து கொண்டு அறுசுவை உணவு வழங்கி ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

## சென்னை மாவட்டத்தில் பெறப்பட்ட

# வாக்காளர் பதிவு விண்ணப்பங்களை உடனடியாக சமர்ப்பித்திடுக!

## மாவட்ட தேர்தல் அலுவலர் அறிவிப்பு!

சென்னை, நவ.29-

சென்னை மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வழங்கப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்து திரும்ப வழங்கினால் மட்டுமே வாக்காளர்கள் பெயர், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் என்றும், படிவங்களை பதிவேற்றம் செய்யும் பணியினை முழுமையாக நிறைவேற்றிடும் வகையில், வாக்காளர்கள் இறுதிநாள் வரை காத்திராமல் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை விரைந்து வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை தங்களிடமிருந்து பெறவில்லை எனில் 1913 என்ற உதவி எண்ணில் வாக்காளர்கள் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்திற்கான கணக்கீட்டுப் படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வாக்காளர்களுக்கு வழங்கும் பணியானது 04.11.2025 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் வாயிலாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வாக்காளர்களுக்கு கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்வதற்கு உதவிடும் வகையில், அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்காளர் உதவி மையங்கள் அமைக்கப்பட்டு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வழிகாட்டுதலுடன் படிவத்தினை பூர்த்தி செய்யவும் வழிவகை செய்யப்பட்டதன் மூலமாக பெரும்பாலான கணக்கீட்டுப் படிவங்கள் பெறப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர் கணக்கீட்டுப் படிவங்கள் வழங்கி திரும்ப பெறும் பணியினை 04.12.2025க்குள் முடித்திட அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில், வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட கணக்கீட்டுப் படிவங்கள் இந்திய தேர்தல் ஆணைத்தின் செயலியில் பதிவேற்றம் செய்யும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியை முழுமையாக பூர்த்தி செய்திடும் வகையிலும், வாக்காளர்கள் இறுதி நாளான 04.12.2025 வரை காத்திருக்காமல் தங்களுக்கு வழங்கப்பட்ட படிவங்களைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் விரைந்து வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு கணக்கீட்டுப் படிவத்தினை பூர்த்தி செய்து திரும்ப வழங்கினால் மட்டுமே வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெறும். எனவே, வாக்காளர்கள் தங்களுக்கான கணக்கீட்டுப் படிவத்தினை உடனடியாக பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் வழங்கி வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை வாக்காளர்களிடமிருந்து பெறவில்லை எனில் 1913 என்ற உதவி எண்ணில் வாக்காளர்கள் தொடர்பு கொள்ளலாம்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பணியை சென்னை மாவட்டத்தில் நிறைவேற்றுவதற்கு வாக்காளர்கள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 114வது வட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா வட்டக் கழக செயலாளர் கே கோபி தலைமையில் (மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர்) முன்னிலையில் பொதுமக்களுக்கு உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வட்ட கழக நிர்வாகிகள் வி கலையரசி, எஸ் தனஞ்செழியன், எஸ் சுரேஷ், கே அன்பு, எஸ் ஜெயசங்கர், வே உதய சூரியன், ராஜகுமாரி, கே. ரமேஷ், எஸ் கார்த்திக், அன்வர் இஸ்மாயில், முகமது இதிரிஸ், சர்ப்பராஸ், ராஜ்குமார், வி பி கதிரவன், ஆர் கணபதி, மாஜித் ரகுமான், சந்துரு, குணா, நந்தகோபால், ராமு, காமராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



இலத்தூர் தெற்கு ஒன்றிய கழக இளைஞரணி சார்பில் கழக இளைஞரணிச் செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு லிட்டில் ஹார்ட்ஸ் காப்பகத்தில் அறுசுவை உணவை இலத்தூர் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மோ.தமிழ்மாறன் ஏற்பாட்டில் இலத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.பாபு தலைமையில் வழங்கப்பட்டது.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ.நகர் மார்க்கெட் அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் கழக கொடியேற்றி காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. உடன் ஒன்றிய நிர்வாகிகள் ஏ.காசீம் முஹம்மது, சே. அரசு, பா.சேகர். பொண் கோதண்டன், சன் முனியாண்டி, நா.பரசுராமன், வி.ஞானம், ப.சு.க. இளங்கோவன், துளசி, இரத்தினமாலா, ஜெ.சிவகாமி, சரஸ்வதி செல்வம், எஸ்.டி.சுந்தரமூர்த்தி, முகம்மது அலி, ஏ.சந்திரன், து.அ.குமரன், ஆர்.சி.சிவசங்கர், முத்தையா. எஸ்.கே.மணி, எஸ்.நாகராஜ் ஏ.கே.செல்வகுமார். முத்துகுமார், கே.வி.தியாகராஜன், பழநி, ஏம்.முகம்மது அலி விவேகானந்தன், எஸ்.கர்ணா, ஹயாத்பீ, காயத்ரி, மாரியம்மாள், ஜெயா. புவனேஷ்வரி. ப்ரியா. வாணி ரகுபதி. க.பிரபு, சுரேந்தர், ஹரி, கிருஷ்ணன் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. அறிவுறுத்திலன்படி திருவொற்றியூர் மேற்கு அவைத் தலைவர் நா.திருசங்கு வட்ட அவைத்தலைவர் முனுசாமி முன்னிலையில் 1வது வட்ட கழக செயலாளர் சிவக்குமார் எம்.சி. தலைமையில் டாக்டர் சத்திய வாணி முத்து நகர் கிராம் 2 வது தெருவில் கழக கொடி ஏற்றி மக்களுக்கு இனிப்புகள் மற்றும் உணவு வழங்கி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து தாழங்குப்பம் பேருந்து நிலையம் அருகில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் ந.சக்கரவர்த்தி, ஜி.முரளி என்.சொந்தராஜன், மதி , சசிகலா, கண்ணன், ராஜா அன்பழகன், வே.தேசிங்கு, தயாநிதி அறிவொளி, ரவி, சரவணன், சதிஷ், தேசப்பன் பாகமுகவர்கள் மற்றும் தோழர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.